DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC.No. 39/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவனகுகன் | தொழில் | : | சுயதொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிருஷ்ணசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | திருப்பூர் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.03.2022.

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரியின் பொருளாதார வசதி பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் நிரந்தர வருமானவரி கணக்கு எண் இருக்கிறது. எனது சொந்த ஊர் திருப்பூர் என்பதால் எனக்கு திருப்பூரில் மட்டும்தான் வங்கி கணக்கு இருக்கிறது என்றால் இல்லை வெள்ளகோவிலிலும் இருக்கிறது. வெள்ளகோவில் கரூர் வைசியா வங்கியில் கணக்கு துவங்கி சுமார் 9 வருடங்களுக்கு மேல் ஆகிறது. எனக்கு கணக்கு துவங்க ஒரு தட்சிணாமூர்த்தி என்பவர் தான் அறிமுகம் செய்து இருக்கிறார் என்றால் இல்லை. கரூர் வைசியா வங்கியில் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்க்கு மட்டுமே கணக்கு துவங்கினேன் என்றாலும் அக்கணக்கில் எனக்கு வேறு வரவு செலவு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் இடையில் சட்டப்பூர்வமான கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலைக்கு எத்தகைய மறுபயனும் இல்லை என்றாலும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.